அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 37-2022*

## பெற்றோர்குழு 2022 - 2023

10.09.2022 வகுப்புப்பிரதிநிதிகள் கூட்டத்தில் பெற்றோர்குழுவினர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

- பொறுப்பு: திருமிகு. யசோதரை (யசோ) குமாரவேலு (5ம் வகுப்புப் பிரதிநிதி)
- செயலாளர்: திருமிகு. ரமேஸ் முருகேசு (4ம் வகுப்புப் பிரதிநிதி)
- கணக்காளர்: திருமிகு. சுமதி ஜெகதீபன் (2ம் வகுப்புப் பிரதிநிதி)

*பெற்றோர்களுக்கும் வகுப்புப்பிரதிநிதிகளுக்கும் தொடர்பாடலுக்கான அதே வைபர் குழுமம் இயங்குநிலையில் இருக்கும். அனைவரும் தங்கள் பிள்ளைகளின் வகுப்புக்குரிய குழுமங்களில் மட்டும் இணைந்துகொள்ளவும்.*

பெற்றோர்குழு மற்றும் வகுப்புப்பிரதிநிதிகளுக்கான முதல் சந்திப்பு இவ்வாரம் 10:00 இற்கு இடம்பெறும்.

## கல்வி - 17.09.2022 சனிக்கிழமை வழமைபோல்

மழலையர் & சிறுவர்நிலை வகுப்புகள் 09:30 - 12:00 வரையும்
1ஆம் வகுப்பு - 11ஆம் வகுப்பு வரை 09:30 - 12:30 வரையும்
இடைவேளை நேரம் 10:45 - 11:15 வரையும்

அனைத்து மாணவர்களையும் மேல்கட்டிடத்தில் (சந்திப்புகள் நடைபெறும் இடத்திற்கு) காலை 09:25 மணியளவில் ஒன்றுகூடும் வண்ணம் அறியத்தருகின்றோம். காலை வணக்கம், பாடசாலைக்கீதம், பிறந்தநாள் வாழ்த்து மற்றும் சில தகவல்களுடன் பாடசாலை ஆரம்பமாகும் என அறியத்தருகின்றோம்.

*மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
சிற்றுண்டிச்சாலை வழமைபோல் இயங்கும்.

அறிவாடல் 2022 - அனைத்துலக மாணவர்களுக்கான இணையவழி அறிவாடல் போட்டி. இறுதிப்போட்டி 22.10.2022 நடைபெறும். *கணினியில் பொருத்தமான விடையைத்தெரிவு செய்யும்படி இப்போட்டி நடைபெறும். வழங்கப்பட்ட கேள்வி-பதில்களை நன்கு பயின்று தயார் நிலையில் இருக்கும்படி மாணவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.*
இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள மாணவர்கள் தங்கள் வகுப்பாசிரியர்களினூடாக பெயர்விபரங்களை வழங்கவும்.

### கலை - வகுப்புகள்

12:45 - 13:30 வரையும் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் வகுப்பாசிரியர்கள் அறியத்தருவார்கள்.

- நவராத்திரி விழா 2022 - 24.09.2022 சனிக்கிழமை Kjenn பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். நவராத்திரி தொடக்கநாள் 26.09.2022. ஆகையால் ஏடுதொடக்கல், கலைப்பாடம் தொடக்கம் மற்றும் கலை ஆசிரியர்களுக்கான மரியாதைசெலுத்துதல் 01.10.2022 சனிக்கிழமை அன்று ஓசன்பாடசாலையில் நடைபெறும்.

1. தங்கள் குழந்தைகளுக்கு ஏடுதொடக்கவோ அல்லது சிறுவர் வகுப்பில் இணைக்கவோ விரும்பினால் முன்கூட்டியே பதியவும்.
2. அன்று கலைவகுப்புகளில் புதிதாக இணையவிரும்புவபர்கள் 28.09.2022இற்கு முன்னதாக கலைப்பொறுப்பாளருக்குத் தெரிவிக்கவும்.

- நவராத்திரி விழாவுக்கான அழைப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

### நிதி

கட்டணங்களை இன்னும் செலுத்தாதவர்கள் விரைவில் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

# நவராத்திரி விழா 2022

இடம்: சென் பாடசாலை மண்டபம்

முகவரி: Hasselveien 4, 1470 Lørenskog

காலம்: 24.09.2022 சனிக்கிழமை

நேரம்: 10:00 மணி

எமது கலை, பண்பாடு, கலாசார விழுமியங்களை புலம்பெயர்தேசங்களில் எம் இளையவர்களும் பேணிக்காத்து மகிழ்வுடன் வாழ்ந்திட வழிசெய்யும் வகையில் தமிழர் விழாக்களை நாம் ஆண்டுதோறும் எமது வளாகத்திலும் நடாத்திவருவது தாங்கள் அறிந்ததே.

இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.
நிர்வாகம்
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - லோறன்ஸ்கூக் வளாகம்